# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க,**
**மதுவரி (திருத்தச்) சட்டம்**

[*2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.-ஓ 21/2018*

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஓராம் உட்பிரிவில், "உரிமமொன்றின்கீழ் ஏதேனும் மது வரிக்குட்பட்ட பொருளை உற்பத்திசெய்கின்ற அல்லது விற்பனைசெய்கின்ற ஒவ்வோராளும்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "உரிமமொன்றின், அனுமதிப்பத்திர மொன்றின் அல்லது அனுமதிச் சீட்டொன்றின் கீழ் ஏதேனும் மது வரிக்குட்பட்ட பொருளை இறக்குமதி செய்கின்ற, ஏற்றுமதி செய்கின்ற, இடம்பெயர்க்கின்ற, உற்பத்திசெய்கின்ற, விற்பனை செய்கின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற ஒவ்வோராளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "குறித்தசில உரிமம் பெற்றவர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமம், அனுமதிப்பத்திரம் அல்லது அனுமதிச்சீட்டு ஒன்றை வைத்திருப்பவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்திகளை உட்புகுத்து வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஒஅ) மதுவரிக்குட்பட்ட பொருளொன்று இறக்குமதி செய்யப்படும்போது, ஏற்றுமதி செய்யப்படும்போது, இடம்பெயர்க்கப்படும்போது, உற்பத்தி செய்யப்படும் போது, விற்பனை செய்யப்படும்போது, உடைமையில் வைத்திருக்கப்படும்போது அல்லது களஞ்சியப் படுத்தப்படும்போது அத்தகைய மதுவரிக்குட்பட்ட பொருளின்மேல் ஒட்டப்படவேண்டிய பாதுகாப்பு சிறப்புக்கூறுகளின் வகைகளை விதித்துரைத்தல்;

(ஒஆ) மதுவரிக்குட்பட்ட பொருளொன்று இறக்குமதி செய்யப்படும்போது, ஏற்றுமதி செய்யப்படும்போது, இடம்பெயர்க்கப்படும்போது, உற்பத்தி செய்யப்படும் போது, விற்பனை செய்யப்படும்போது, உடைமையில் வைத்திருக்கப்படும்போது அல்லது களஞ்சியப் படுத்தப்படும்போது அத்தகைய மதுவரிக்குட்பட்ட பொருளின்மேல் ஒட்டப்பட வேண்டுமென (ஒஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு சிறப்புக்கூறுகளை வழங்குவதற்கான விதிப்பனவு களை அறவிடுதல்;".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*